[1980 பிப்ரவரி 6

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, இந்த மின்சார இலாகாவிலே இப்பொழுதான் செக் பண்ணுகிறார்கள். அதற்குப் பிறகு சர்டிபிகேட் கொடுக்கிறார்கள். அதற்காக எவ்வளவு கட்டணம் வசூலிக்கிறார்கள்? அந்தக் கட்டணம் அதிகமானதா என்பதுதான் கேள்வியின் நோக்கம். அந்தக் கட்டணத்தைக் குறைப்பதில் அரசு ஏன் தயக்கம் காட்டுகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கட்டணம் ஒரே மாதிரியாகத்தான் 1963-ம் ஆண்டிலிருந்து இருந்து வருகிறது. ஆனால் முன்பு மூன்று ஆண்டுகளுக்கும், ஒவ்வொரு ஆண்டிற்கும் தனித்தனியாக வசூலிக்கப்பட்டது. இப்பொழுது மூன்று ஆண்டுகளுக்கும் சேர்த்து வசூலிக்கப்படுகிறது. முன்பு முதல் ஆண்டில் 150 ரூபாய், அடுத்த இரண்டு ஆண்டுகளில் ரூ. 75, ரூ. 75 என்ற வீதத்தில் மொத்தம் 300 ரூபாய் வசூலிக்கப்பட்டது. இப்பொழுது 300 ரூபாய் ஒரே ஆண்டில் மொத்தமாக வசூலிக்கப்படுகிறது.

குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டம்.

குறுகியகால * வினா எண். 1. திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நீண்ட நாட்களாக பரிசீலனையில் இருந்து வந்த பழனி வட்டத்திலுள்ள குதிரையாறு நீர்த் தேக்கத் திட்டத்தின் தற்போதைய நிலைமை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இத் திட்டத்திற்கான மதிப்பீடுகளை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அரசுக்கு அனுப்பியுள்ளார். திட்டம் அரசின் ஆய்வில்உள்ளது.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, பழனி வட்டத்திலுள்ள குதிரையாறு நீர்த் திட்டம் நீண்ட நாட்களாக இழுத்து அடிக்கப்பட்டு தற்போது ஆய்வு செய்யப்பட்டு தலைமை பொறியாளரிடம் இருப்பதாகச் சொன்னார்கள். இந்தத் திட்டம் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்படுமா? இதனால் எத்தனை ஏக்கர் பாசன வசதி கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

1980 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. ப, குழந்தைவேலு: தலைவர் அவர்களே இந்தத் திட்டம் நீண்ட நெடு நாட்களாக அரசினுடைய ஆய்விலிருந்து இப்போது இந்த அரசு வந்ததற்குப் பின்னாலேதான் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று முடிவு செய்தது. 301 லட்சம் ரூபாயில் இந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 3,250 ஏக்கர் புதிய புஞ்சை நிலம் டாசன வசதி பெறும், 400 ஏக்கர் இரண்டுபோக நஞ்சை நிலங்கள் பயன் அடையும் 2,200 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி பெறவும் 202 ஏக்கர் பாசனப் பற்றாக்குறை போகவும் வழி வகை செய்யும் திட்டமாக இது இருக்கும்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, திட்டத்தினுடைய விவரங்களை அமைச்சர் கூறியதற்கு நன்றி. இந்தத் திட்டம் இந்த ஆண்டே எடுத்துக் கொள்ளப்படுமா என்றும், அமைச்சர் அவர்களும் இந்தத் தொகுதியில் சம்பந்தப்பட்டிருப்பதால், அவருடைய சார்பிலேயும் வேண்டுகோளாக வைக்கிறேன். இந்த 2 தாலுகாவிலும் உள்ள மக்கள், இந்த அணைக் கட்டினால் வசதி அடைவார்கள். எனவே இந்த ஆண்டே அவசியமாக எடுத்துக் கொள்ளப்படும் என்ற உறுதியை அளித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே உடுமலைப் பேட்டை தொகுதியும், பழனி தொகுதியும் பயன் பெறுகிற வகையிலே இந்தத் திட்டம் இந்த ஆண்டிலேயே அமல் படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல்கோரல்

(அ) டீசல் பற்றாக்குறை குறித்து.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, மிக முக்கியமான விஷயத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு எழுந்து நிற்கிறேன், சேலம் மாவட்டத்திலே ஆத்தூர் பகுதியிலே விவசாயிகள் எல்லாம் மிகுந்த சங்கடத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள். பஸ் போக்குவரத்தை மறித்து பெரிய போராட்டத்தை நடத்தி இருக்கிறார்கள்.......